BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரில் 400 –பணியாளர்கள் வேலை செய்யும் வகையிலான லீட் (LEED) சான்றளிக்கப்பட்ட புதியதொரு இயக்க செயல்பாட்டு மையத்தை அலெக்ட்ரா (Alectra) அமைப்பு திறக்கவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 15, 2021) – கடந்த வாரம் நடைபெற்ற ப்ராம்ப்ட்டன் நகரசபைக்குழு கூட்டத்தில், ப்ராம்ப்ட்டன் நகரின் 200 கென்னடி ரோட் தெற்கு எனும் முகவரியில் வைத்து, புத்தம் புதியதொரு, நிலைத்து நிற்கவல்ல வணிக இயக்க செயல்பாடுகளுக்கான மையம் ஒன்றைக் கட்டுமானம் செய்யவிருப்பதாக அலெக்ட்ரா (Alectra) அமைப்பு அறிவித்தது.

புதிய மையம் அமையவிருக்கும் இடத்தில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக சிறு வணிகம் வகையில் 78 வணிகர்களும், தங்குமிடம் மற்றும் உணவு சேவைகள் வகையில் 55 வணிகர்களும் உள்ளனர். இந்தப் பகுதிக்கு 400 – அதாவது தற்போது இருக்கும் மையத்தின் எண்ணிக்கையைப்போல இரண்டரை மடங்கு-பணியாளர்களை பணியமர்த்துவதில் அலெக்ட்ரா (Alectra) நிறுவனம் ப்ராம்ப்ட்டன் நகருக்கு உதவுகிறது; இதன் மூலம் ப்ராம்ப்ட்டன் நகரின் சில்லறை விற்பனை மற்றும் உணவு சார்ந்த வியாபாரங்கள், இந்த இயக்க செயல்பாட்டு மையத்தில் கூடிய விரைவில் அமைவதற்கு உதவி செய்து, உள்ளூர்ப் பொருளாதாரத்திற்கு ஆதரவளித்து, எதிர்கால வளர்ச்சிக்கும் வலு சேர்க்கப்படும்.

நிலைத்து நிற்கும் தன்மைக்கான நகரின் அர்ப்பணிப்புடன் ஒத்துபோகும் வகையில் இந்த புதிய கட்டிட வசதியானது தங்கத்தரத்திலான லீட் LEED [(சக்தி மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பு வகையில் தலைமைத்துவம்)Leadership in Energy and Environmental Design] சான்றளிப்பு வழங்கப்படும்; மேலும் ப்ராம்ப்ட்டன் மற்றும் மிஸ்ஸிஸ்ஸாகா நகரங்களுக்கு சேவையாற்றுகின்ற 400 க்கும் மேலான எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு ஒட்டுமொத்தமான ஒரு இயக்க செயல்பாட்டு மையமாக விளங்கும்.

லீட்(LEED) சான்றளிக்கப்பட்ட கட்டிட வசதிகளின் அம்சங்களில் சில:

- தரம் உயர்த்தப்பட்ட, தனக்கே உரித்தான வகையில் திறந்தவெளி காற்றோட்டம் கொண்ட கட்டுமான அமைப்புக்கள் (DOAS) - LEED தங்கத்தரங்களையும் தாண்டி GHG உமிழ்வுகளை சுமாராக 43% அளவுக்கு குறைத்தல்

- மேற்கூரை சூரிய சக்தியை 500KW அளவுக்கு உருவாக்குதல் – கட்டிடத்தின் மின்சக்தி தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில்  வருடம் ஒன்றுக்கு 800 MWh அளவுக்கு புதுப்பிக்கத்தக்க மின்சக்தி வழங்கிட உதவும்
- மின்சார வாகனங்களுக்காக  30 க்கும் அதிகமான சார்ஜிங் நிலையங்கள் நிறுவப்பட்டு அலெக்ட்ரா (Alectra) வில் இருக்கும் அனைத்து வாகனங்கள், பணியாட்கள் மற்றும் பொது மக்களால் உபயோகிக்கப்படும்

இதற்காக, ஆகஸ்ட் 2021 வாக்கில் பிரம்மாண்டமான துவக்க விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் இந்தத் திட்டப்பணியை ஆகஸ்ட் 2023 இல் பூர்த்தி செய்யவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அலெக்ட்ரா (Alectra) பற்றி  இங்கு மேலும் அதிகம் படிக்கவும்.  ப்ராம்ப்ட்டனின் பொருளாதார வளர்ச்சி பற்றி இங்கு மேலும் அதிகம் படிக்கவும்.

**அலெக்ட்ரா இன்க் (Alectra Inc.) பற்றி**

வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கை அடிப்படையில்,  ஒன்ட்டேரியோவின் கிரேட்டர் கோல்டன் ஹார்ஸ் ஷூ (Greater Golden Horseshoe)  பகுதியில் ஒரு மில்லியன் எண்ணிக்கையிலான வீடுகள் மற்றும் வணிகங்களுக்கு  சேவையாற்றி வருகின்ற அலெக்ட்ரா அமைப்புதான் இப்போது கனடாவிலேயே மிகப்பெரிய, நகராட்சிக்கு சொந்தமான, மின்சார சேவை வழங்கும் நிறுவனமாகும். அத்தியாவசியமான மின்சக்தி உள்கட்டமைப்புக்கு முதலீடு செய்து, பாதுகாப்பானதும் நம்பகமானதுமான மின்சாரம் வழங்கலை உறுதி செய்து, புதுமை படைக்கும் வகையிலான ஆற்றலுக்கான தீர்வுகளை வழங்கி, அவர்கள் சேவையாற்றும் 17 சமூகத்தினரின்  பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதுவும் அவர்களேயாவர்.

தொலைநோக்குப்பார்வைக்கான அலெக்ட்ரா (Alectra) அமைப்பின்  செயல்திட்டமானது, தங்களின் வாடிக்கையாளர்களுக்கு உதவுதல் மற்றும் தாங்கள் சேவையாற்றும் சமுதாயங்கள் நாளைய சக்திக்கான சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடிப்பதாகவும் இருக்கிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம், நமது கூட்டாளர்களுடன் சேர்ந்து, பெருமளவில் நிலைத்து நிற்கக் கூடிய சமூகத்தை உருவாக்குவதற்கும், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நமது தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதற்கும் நாம் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம்.  அலெக்ட்ரா (Alectra) தனது புதிய இயக்கசெயல்பாட்டு மையத்திற்கான தளமாக ப்ராம்ப்ட்டன் நகரைத் தேர்ந்தெடுத்ததில் நாங்கள் பரவசமடைகிறோம்; மேலும் இந்த புதிய இடம் தெற்கு கென்னடி சாலைப் பகுதியில் உள்ள உள்ளூர் வணிகங்களுக்கு,  இது கொண்டு வரும் கூடுதல் நன்மைகளைக் காணவும் ஆவலுடன் காத்திருக்கிறோம்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"'ப்ராம்ப்ட்டன் நகரம், 2050 ஆம் ஆண்டிற்குள் நகரத்தில் உருவாகும் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வை 80 சதவிகிதம் அளவுக்கு குறைக்கின்ற தனது பயணத்தில் உள்ளது, அவ்வாறு செய்ய அது நமது சமூகம் முழுவதும் இருக்கும் கூட்டாளர்களின் கூட்டு முயற்சிகளையும் சேர்த்துக்கொள்ளும் என்பதை நகர நிர்வாகம் அறிந்திருக்கிறது. லீட் (LEED) சான்றளிக்கப்பட்ட அலெக்ட்ராவின் புதிய தங்கத்தரம் கொண்ட இயக்கசெயல்பாட்டு மையம் திறக்கப்படுவதை நாங்கள் எதிர்நோக்கி காத்திருக்கிறோம்; மேலும் ப்ராம்ப்ட்டன் நகருக்கு அருகாமையிலேயே அமைய உள்ள, 400 ஊழியர்களைக் கொண்ட ப்ராம்ப்ட்டனின் சிறந்த உணவு மற்றும் சில்லறை வணிக அமைப்புக்களுக்கு வருகை புரிந்து அனுபவிக்க ஆர்வம் கொண்டிருக்கிறோம். "

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

ப்ராம்ப்ட்டன் நகரமானது, முதலீட்டை ஆதரிக்கின்ற ஒரு பொருளாதார சூழலை வழங்குகிறது, மற்றும் எங்கள் உள்ளூர் சமூகத்துடன் வணிகங்கள் வளரவும் அனுமதிக்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரில் விரிவாக்கம் செய்யும் அலெக்ட்ராவின் முடிவை நாங்கள் வரவேற்கிறோம். இந்த திட்டமானது கட்டுமான வேலைகளுக்கான வேலை வாய்ப்ப்பினை வழகுகிறது; அது முடிந்ததும், 400 நபர்களுக்கான வேலை வாய்ப்பு கிடைக்கவிருக்கும் இந்தத் தளத்தின் கூடுதல் நன்மை இப்பகுதியில் உள்ள உள்ளூர் வணிகர்களால் உணரப்படும். "

*- பால் விசென்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத் தலைவர், பொருளாதார மேம்பாடு மற்றும் கலாச்சாரம், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"தங்களின் புதிய இயக்க செயல்பாட்டு மையத்திற்கான அமைவிடமாக அலெக்ட்ரா நிறுவனம் நமது பசுமை நகரத்தை தேர்ந்தெடுத்துள்ளதாக அறிவிப்பதில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறது. LEED சான்றளிக்கப்பட்ட இந்தப் புதிய கட்டிடவசதியானது, GHG உமிழ்வைக் குறைப்பதற்கும், குறிப்பிடத்தக்க வேலைகளை இப்பகுதிக்கு கொண்டு வருவதற்கும் உள்ளூர் வணிகங்கள் மீட்சி பெறவும் உதவுகிறது. 3 ஆவது வார்டின் சார்பாக, அவர்களை இந்த பகுதிக்கு வரவேற்க காத்திருக்கிறோம். "

- ஜெஃப் பௌமன், நகர கவுன்சிலர், வார்டுகள் 3 & 4, ப்ராம்ப்ட்டன் நகரம்

ப்ராம்ப்ட்டன் நகர ஊழியர்களின் சார்பாக, ப்ராம்ப்ட்டன் நகரில் உள்ள 200 தெற்கு கென்னடி சாலை என்னும் இடத்தில் கட்டப்படவுள்ள இயக்க செயல்பாட்டு மையம் பற்றிய செய்தி குறித்து, அலெக்ட்ரா (Alectra) அமைப்பை வாழ்த்துகிறோம். கவுன்சிலின் ஆயுட்கால கால முன்னுரிமை கொண்ட விஷயத்தை முன்னெடுப்பதற்கு நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம்: ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம், மேலும் காலநிலை மாற்றத்திற்கு இசைந்துகொடுக்கும் தன்மையை அதிகரிப்பதற்கும் எரிசக்தி செயல்திறனை

மேம்படுத்துவதற்கும் தங்கள் அர்ப்பணிப்பைப் பகிர்ந்து கொள்ளும் நமது சமூகம் முழுவதும் உள்ள அனைத்து கூட்டாளர்களையும் வரவேற்கிறோம். ”

*- டேவிட் பாரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நிலைத்து நிற்கவல்ல ஒரு நிறுவனமாக இருந்தபடி, புதுமை படைக்கும் வகையிலான எரிசக்தி தீர்வுகளை செயல்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழலில் நமது தடம் பதிவதைக் குறைப்பதற்கு அலெக்ட்ரா உறுதிபூண்டுள்ளது. இந்தப் புதிய கட்டிடம், பீல் பிராந்தியத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சேவை நிலைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், 2050 க்குள் நெட்-ஜீரோ (அறவே உமிழ்தல் இல்லாத) பகுதியாக மாறுவதற்கான பயணத்திலும் இது நமக்கு உதவும். ”

*- ஜேம்ஸ் மேக்கும்பர், துணைத் தலைவர், விநியோகச் சங்கிலித்தொடர், அலெக்ட்ரா யுட்டிலிட்டீஸ்* (*Alectra Utilities)*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca